09.09.2025



## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.253/2011

## பி.வா.சா. 1–பெரியண்ணன், த/பெ.பெருமாள்

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னால் மாதிரி வரைபடம் வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து குறுக்கு விசாரணை செய்தால் நான் பதிலளிப்பேன். தாவாவுக்கு சம்மந்தப்பட்ட கிணறு பொது கிணறு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் சர்வே எண்.293/3 சி–ல் தான் தாவா பொது கிணறு உள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்துவிட்டு சரி என்கிறார். இந்த தாவா பொது கிணற்றில் பாதி பாகம் வாதி தங்கராசுவுக்கும், அவரது சகோதரர் ஆனந்தனுக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான், மீதி பாதை எனக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா பொது கிணற்றுக்கு ஆயக்கட்டு நிலங்கள் எவ்வளவு என்றால் மின்இணைப்பு பெறும் போது 1 ஏக்கர் என காண்பித்து தான் பெற்றோம். அதன்பிறகு தாவா பொது கிணற்றிற்கு கட்டுப்பட்ட நிலமான 1 ஏக்கலிருந்து அதிகப்படுத்தினோம் என்று சொன்னால் சரிதான்.

09.09.2025

/4/

(வாதி வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.